## பிரதேச அபிவிருத்தி வங்கி - 2016

---

பிரதேச அபிவிருத்தி வங்கியின் (''வங்கி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்ததி வங்கி அதிகாரச்சட்டத்தின் 33 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியது. 1971 இன் 38 ஆம் ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்துணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழிப்பு கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

1988 இன் 30 ஆம் இலக்க வங்கியில் சட்டம் மற்றும் அவற்றின் மீதான பின்தொடர் திருத்தங்களினால் வேண்டப்பட்ட தகவலின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களின் பிரகாரம் நட்டக்கழிவு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 105,425,557 தொகை அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டிற்கான குறைத்துக்குறிப்பிடப்பட்ட வட்டி வருமானம் ரூபா 20,062,822 தொகை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மீள குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக 2016 ஆம் ஆண்டிற்கான வட்டி வருமானமாக கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 3,193,923,358 தொகையான மொத்த ஊழியர் கடன்களில், 2016 ஆம் ஆண்டின் இறுதியின் முகப்பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டதற்கான ரூபா 64.6 மில்லியன் பெறுமதியான ஊழியர் கடன்களினை வங்கி கருத்திற் கொண்டிருக்கவில்லை.

(iii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான உறுதிப்படுத்தலில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய குத்தகை மீதிக்கும் பொதுப் பேரேட்டிற்கும் இடையே ரூபா 2,679,980 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | | இணங்காமை |
|---|---|---|---|
| (அ) | வங்கி அதிகாரச்சட்டம் நெறிப்படுத்தல்கள் | | |
| | (i) | 2007 இன் 10 ஆம் இலக்கம் | 2016 ஆம் ஆண்டின் போது மொத்த இடருக்கான நிறையழிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் 10 சதவீதமான ஆகக்குறைந்தளவு மூலதனப் போதுமை விகிதத்தை பராமரிக்கப்பட்டிருக்காமைச் சந்தர்ப்பமொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) | 2015 இன் 01 ஆம் இலக்கம் | 2016 ஆம் ஆண்டின் போது 70 சதவீத ஆகக்குறைந்தளவு திரவத்தன்மை காப்பு விகிதம் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 114 ஆம் பிரிவு, 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பந்தி | ஊழியர்களின் ஊதியத்திலிருந்து, உழைக்கும் போதே செலுத்தும் வரியை (பிஏவைஈ) வங்கி கழித்து அனுப்புதல் வேண்டும். எவ்வாறாயினும், அதற்கமைய பிஏவைஈ வரியினை கழிப்பனவு செய்யாது, அதன் சொந்த நிதியிலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கு ரூபா 20,425,009 தொகையான பிஏவைஈ வரியை வங்கி செலுத்தியிருந்தது. |
| (இ) | | 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) | 9.2(இ) பிரிவு | வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பிரகாரம், உதவி முகாமையாளர் பதவிகளின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 1092 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் அந்த தேவைப்பாட்டிற்கு முரணாக, 2016 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த பதவிக்கு 01 ஊழியரை வங்கி மேலதிகமாக ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. |
| | (ii) | 9.2(ஈ) மற்றும் 9.3.1 ஆம் பிரிவு | வங்கிசார் அனைத்துப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வுகளுக்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் தேவைப்படுகின்றது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 வரையேனும் ஆட்சேர்ப்புத்திட்டமொன்றை மற்றும் பதவியுயர்வுகளினை வங்கி தயாரித்து அங்கிகரித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | 9.2(உ) பிரிவு | புதிய பதவியணியொன்றினை உருவாக்கும் போது, நிறுவன அமைப்பு வரைபடத்துடன் உரிய விண்ணப்பப்படிவத்தை அனுப்பி தொழில்முயற்சியானது பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற வேண்டிய போது, அவ்வாறு செய்யாது புதிய பதவியணியினர் பதவிகளுக்கு 03 ஊழியர்களினை வங்கி ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. |
| (iv) | 9.3.1 ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டிற்கு வங்கியினால் தொடர்சியான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (v) | 9.7 ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வினைக் கொண்டிராமல் பிரதம முகாமையாளர் உள்ளடங்களாக 05 உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2010.08.03 ஆம் திகதிய 2010/10 ஆம் இலக்க (அபிவிருத்திக் கடன்) அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கை | 2016 ஆம் ஆண்டின் இறுதியில் நட்டக்கழிவு கணிப்பீட்டுடன், அடகு முற்பணங்களின் வட்டி வருமானத்திலிருந்து 01 சதவீத ஏற்பாடொன்று வங்கியானது மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், மேற்குறித்த ஏற்பாடு மீளமைக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 972 மில்லியன் வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 1,256 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறியலாபத்தினை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 284 மில்லியன் அல்லது 29 சதவீத முன்னேற்றமொன்றினை சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வட்டி வருமானம் ருபா 3,054 மில்லியனால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

#### 3.1.1 வங்கியின் பெறுமதிக் கோரிக்கை

முன்னைய ஆண்டிற்கான ரூபா 5,797 மில்லியன் பெறுமதிச் சேர்க்கையுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,374 கூட்டுத்தொகையான தனிநபர் ஊதியம், வரிச் செலவினங்கள் மற்றும் பெறுமானத்தேய்வினைக் கருத்திற் கொண்ட பின்னர் மீளாய்வாண்டிற்கான வங்கியின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 7,015 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும் கம்பனியின் பெறுமதி சேர்க்கை ரூபா 1,218 மில்லியனால் முன்னேற்றமடைந்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

-----------------------------------------------------------

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், துறை விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறு.

| **குறிகாட்டி** | **துறை விகிதங்கள் (அனுமதி பெற்ற விசேட வங்கி)** | **2016** | **2015** |
|---|---|---|---|
| ---------------- | ------------------------ | --------- | ----------- |
| | **சதவீதம்** | **சதவீதம்** | **சதவீதம்** |
| **இலாபத்தன்மை விகிதம்** | | | |
| தேறிய இலாப விகிதம் | 9.30 | 4.07 | 4.23 |
| தேறிய வட்டி எல்லை | 3.76 | 6.61 | 6.84 |
| வட்டியின் தேறிய வட்டி வருமானம் | 33.87 | 51.41 | 56.05 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லா வருமானம் | 4.26 | 5.91 | 6.00 |
| வட்டி வருமானத்திற்கான வட்டிக் கிரயம் | 66.13 | 48.59 | 43.95 |
| செயற்பாட்டு செலவினங்களிற்கான பதவியணியின் கிரயம் | 51.14 | 72.9 | 73.66 |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் | 1 | 0.54 | 0.53 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 18.3 | 11.04 | 9.80 |
| பங்கொன்றிற்கான உழைப்புக்கள் | - | 4.68 | 3.86 |
| **மூலதன போதுமை விகிதம்** | | | |
| (i) தட்டு i | 13.5 | 6.5 | 7.56 |
| (ii) தட்டு ii | 15.2 | 9.27 | 10.53 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | |
| திரவச் சொத்துக்கள் விகிதம் (ஆகக் குறைந்தது 20 சதவீதம்) | 61.4 | 21.25 | 21.77 |
| **சொத்து தரம்** | | | |
| செயற்பாடற்ற முற்பண விகிதம் | 5.28 | 2.86 | 4.00 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 3.76 சதவீத சராசரி அனுமதிபெற்ற விசேட வங்கியுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டிற்கு 6.61 சதவீதமான உயர் தேறிய வட்டி எல்லையொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) 2016 ஆம் ஆண்டிற்குரிய வங்கியின் தேறிய இலாப விகிதம் 4.07 சதவீதமாகும். இது துறை விகிதம் 9.30 சதவீதத்தை விட குறைவானது.

(iii) 51.14 துறை விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டிற்கான வங்கியின் செயற்பாட்டுச் செலவினங்களுக்கான பதவியணியினர் கிரயம் 72.9 சதவீதமாகக் காணப்பட்டது.

(iv) சராசரி சொத்துக்கள் மீதான திரும்பலானது துறை சராசரி 01 உடன் ஒப்பிடுகையில் 0.54 சதவீதத்தினை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(v) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் 4 சதவீதத்திலிருந்து 2.9 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது.

### 3.2.1 வங்கியின் திரவத்தன்மை இடைவெளி

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களின் விபரங்களினை பகுப்பாய்கையில், 03 மாதங்கள் வரையிலான மற்றும் 05 வருடங்களுக்கு மேலதிகமான மொத்தப்பொறுப்புக்கள் மொத்த சொத்துக்களைவிட அதிக மிகையை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்கள் மீதான திரவத்தன்மை இடைவெளி முறையே ரூபா 26,165,176,253 மற்றும் ரூபா 12,411,019,459 ஆகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.1.1 பிரதான நோக்கங்களை அடைதல்

2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரகாரம் வங்கியின் நோக்கங்கள் பின்வருமாறு.

- விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வணிகம், கால்நடை, மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் மகளீர் அதிகாரம் என்பவற்றின் அபிவிருத்தியை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளித்தல்.

- நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் என்பவற்றிற்கு நிதிசார் உதவியை வழங்குதல்.

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதில் 2016 ஆம் ஆண்டின் போது வங்கியின் செயலாற்றல் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| நிதிசார் உதவிகளை வழங்குவதற்கு இலக்கிடப்பட்ட பரப்புக்கள் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான இலக்கிடப்பட்ட தொகை | மொத்தக் கடன்களின் சதவீதம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான | | மொத்த கடன்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | | கடன்களின் எண்ணிக்கை | தொகை | |
| | ரூபா.மில்லியன் | | | ரூபா.மில்லியன் | |
| விவசாயம் | 11,585 | 16 | 72,465 | 9,520 | 13 |
| கைத்தொழில் | 10,367 | 14 | 36,426 | 1,982 | 3 |
| வியாபாரம் & வர்த்தகம் | 12,789 | 17 | 31,622 | 7,549 | 11 |
| கால்நடை | 2,443 | 3 | 10,947 | 1,717 | 2 |
| மீன்பிடி | 830 | 2 | 2,925 | 660 | 1 |
| சிறிய & நடுத்தரளவு முயற்சிகள் | | | 6,237 | 9,317 | 13 |
| நுண் நிதி நிறுவனங்கள் | | | 05 | 25 | - |
| **உப மொத்தம்** | **38,014** | **52** | **160,627** | **30,770** | **43** |
| ஏனையவை | 35,721 | 48 | - | 40,637 | 57 |
| **மொத்தம்** | **73,735** | **100** | **160,627** | **71,407** | **100** |

(i) ஏனைய வகைகளினைத் தவிர, மேலே குறிப்பிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களினை அடைவதற்கு இலக்கிடப்பட்ட மொத்தக் கடனில் 52 சதவீதத்தினை வழங்குவதற்கு வங்கியினால் இலக்கிடப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 43 சதவீதம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது.

(ii) மொத்தக் கடன்களில் 57 சதவீதமானவை ஏனைய நோக்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த சான்றானது, பிராந்திய அபிவிருத்தியினை கவனஞ் செலுத்துவதனை விட நுகர்வுக் கடன்கள், வீடமைப்புக் கடன்கள், வைப்புகளுக்கு எதிரான கடன்கள், அடகு, குத்தகை மற்றும் ஊழியர் கடன்கள் மீது வங்கி அதிகம் கவனஞ் செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.1.2 வியாபார நோக்கங்களின் அடைதல்கள்

கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின்போது வங்கியின் வியாபார நோக்கங்களின் அடைதல்கள் பொழிப்பாகப்பட்டு தரப்படுகின்றது.

| அடிப்படை | இலக்கு | உள்ளபடியானது | விலகல் {சாதகம்/(பாதகம்)} |
|---|---|---|---|
| தேறிய வட்டி வருமானம் (ரூபா.மில்லியன்) | 8.2 | 7.6 | (0.6) |
| தேறிய செயற்பாட்டு வருமானம் (ரூபா.மில்லியன்) | 8.2 | 8.4 | 0.2 |
| வரிக்கு முன் இலாபம் (ரூபா.மில்லியன்) | 1.6 | 1.26 | (0.34) |
| வருமானத்திற்கான கிரயம் (%) | 76.4 | 86.6 | (10.2) |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | 1 | 0.54 | (0.46) |
| உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் (%) | 17.2 | 11.04 | (6.16) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கூட்டிணைந்த திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான உள்ளபடியானவைகளுக்கு எதிராக பாதகமான முரண்கள் அவதானிக்கபட்டிருந்தது.

### 4.1.3 கடன்கள் நிர்வாகம்

#### (அ) செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் (என்பிஎல்)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த தொகை ரூபா 108,103 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 3,047 மில்லியன் அல்லது 2.9 சதவீதம் மீளாயவாண்டின் இறுதியில் உள்ளபடியான செயற்பாடற்றவையாகக் காணப்பட்டது.

2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மேற்குறித்த செயற்பாடற்ற கடன்களின் வகைப்படுத்தல்கள் பின்வருமாறுள்ளது.

| வகை | 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிலுவையாகவுள்ள மீதி | சதவீதம் |
|---|---|---|
| | ரூபா .மில்லியன் | |
| விசேடமாக குறிப்பிட்ட கடன்கள் | 492 | 16 |
| உப நியம கடன்கள் | 544 | 18 |
| ஐயக் கடன்கள் | 401 | 13 |
| நட்டக் கடன்கள் | 1,610 | 53 |
| மொத்தம் | 3,047 | 100 |

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரூபா 132,119,110 தொகையான வழங்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பில் தனியொரு தவணைக் கட்டணத்தைக் கூட வங்கி அறவிட்டிருக்கவில்லை. மேற்குறித்த முற்பணங்களின் வயதுப் பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றன.

| வயதுப் பகுப்பாய்வு | தொகை |
|---|---|
| | ரூபா. |
| ஒரு வருடத்திற்கு குறைந்தது | 10,619,000 |
| 1-3 வருடங்கள் | 70,342,952 |
| 4-5 வருடங்கள் | 30,966,031 |
| 5 வருடங்களுக்கு மேற்பட்டது | 20,191,127 |
| **மொத்தம்** | **132,119,110** |

**(ஆ) லியா இசுரு கடன் திட்டம்**

2014 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம், எவ்வித வட்டிக் கட்டணமும் இன்றி 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வங்கியினால் ரூபா 2,443.93 மில்லியன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாடற்ற கடன்களாக ரூபா 62.92 மில்லியன் தொகையொன்று அறிக்கையிடப்பட்டிருந்நதுடன் அவற்றில், ரூபா 23.12 மில்லியன் தொகையொன்று நட்ட வகைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**(இ) பதிவழித்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்**

ரூபா 1,826,004,893 தொகையான நட்ட வகைகளின் கீழுள்ள கடன்களில், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மூலதனம் மற்றும் வட்டியை உள்ளடக்கி ரூபா 214,898,939 மற்றும் ரூபா 609,321 தொகைகள் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ பலவீனங்கள்**

2015 யூலை 15 இல் 7.75 சதவீதமான வருடாந்த வினைத்திறனான வட்டி விகிதமொன்றில் வங்கியின் களனி கிளையில் வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி கூட்டமைப்பினால் ரூபா 170 மில்லியன் தொகையொன்று வைப்புச்செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வருடாந்த வினைத்திறனான வட்டி விகிதம் 9.68 சதவீதமென நிலையான வைப்புச் சான்றிதழில் வங்கி பிழையாக குறிப்பிட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 4,038,082 மேலதிக வட்டியொன்றினை வங்கி செலுத்தவேண்டியுள்ளது.

## 4.3 செயற்பாட்டுப் பலவீனங்கள்

### (அ) சொத்துக்களின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அனுராதபுர நகர கிளை செயற்பாட்டிற்கு ரூபா 160,000 மாதாந்த வாடகைக்கு புதியதொரு கட்டிடமொன்று பெறப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 17 மற்றும் 2016 யூலை 05 இல் முறையே முற்பணமாக ரூபா 2,880,000 மொத்த தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. முற்பண செலுத்துகையிலிருந்து ரூபா 48,000 தொகையொன்றை கழித்ததன் பின்னர் ரூபா 112,000 ஆன மாதாந்த தேறிய வாடகையினை வங்கி செலுத்தியிருந்தது. 2017 மே 31 வரையிலும் குறித்த நோக்கத்திற்கு கட்டிடத்தினைப் பயன்படுத்தியிருக்காது வாடகைச் செலவினங்களாக கட்டிட உரிமையாளருக்கு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 934,193 தொகையொன்று வங்கியினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சி நிலையமொன்றின் ஸ்தாபிப்பு நோக்கத்திற்கு ரூபா 25,000 மாதாந்த வாடகையொன்றில் 2014 மார்ச் இல் திருகோணமலை கிளை செயற்படுகின்ற கட்டிடத்தின் முதலாவது மாடி பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சி நிலையம் இதுவரை ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் 2016 திசெம்பர் 31 வரை ரூபா 850,000 ஆன மொத்த வாடகை செலவினமொன்று வங்கிக்கு ஏற்பட்டிருந்தது. ஆகையினால், குறித்த செலவினம் பயனற்ற செலவினமாக அவதானிக்கப்படுகின்றது.

(iii) சிலாபம் மற்றும் அநுராதபுரத்தில் குத்தகையடிப்படையில் இரண்டு ஆதனங்கள் பெறப்பட்டதுடன் திட்டங்களை தயாரிப்பதிலுள்ள தாமதங்கள் காரணமாக முறையே 19 வருடங்கள் மற்றும் 09 வருடங்களினை விட அதிகமாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது.

### (ஆ) செயற்பாடற்ற முதலீடுகள்

1999 தொடக்கம் 2003 காலப்பகுதியின் போது ‘‘வரையறுக்கப்பட்ட வணிகக் கூட்டுத்தாபனத்தின்’’ பங்குகளில் வங்கியினால் ரூபா 47.25 தொகையொன்று முதலிடப்பட்டிருந்த போதிலும், முதலீட்டின் பெறுமதியினையேனும் அறவிடுவதற்கு வங்கி தவறியிருந்தது.

## 4.4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உதவிப் பொது முகாமையாளர்கள் பதவியிலுள்ள 08 வெற்றிடங்களினை நிரப்புவதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அலுவலக உதவியாளர்கள் மற்றும் ஒன்றிணைந்த தரங்களின் பதவிகளில் 57 மிகை பதவியணியினரும் சாரதிகளின் பதவிகளில் 15 வெற்றிடங்களும் பிரதம முகாமையாளர் மற்றும் வங்கியியல் உதவியாளர் மட்டத்தின் வகைகளில் 362 வெற்றிடங்களும் அவதானிக்கப்பட்டது.

**4.5 ஓய்வூதிய நலன்கள் கட்டுப்பாடு**

2016 திசெம்பர் 31 இல் ஓய்வூதிய நலன்கள் கடப்பாடுகளாக கணக்குகளில் ரூபா 1,278,903,024 தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எதிர்கால கடப்பாடுகளினை எதிர்கொள்வதற்கு மற்றும் அந்த தொகையினை முதலிடுவதற்கு வங்கி நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை.

**4.6 வங்கியின் சந்தைப் பங்கு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள், மற்றும் வைப்புக்களின் அடிப்படையில் ஏனைய வங்கிகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு வங்கியின் சந்தைப் பங்கு கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **வைப்புக்கள் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமொன்றாக சந்தைப் பங்கு** | |
|---|---|---|
| | **வைப்புக்களின் அடிப்படையில்** | **கடன்கள் மற்றும் முற்பணங்களின் அடிப்படையில்** |
| 2016 | 12.65 | 20.27 |
| 2015 | 11.48 | 19.58 |
| 2014 | 10.22 | 14.33 |
| 2013 | 10.15 | 17.92 |
| 2012 | 9.69 | 17.59 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வங்கியின் சந்தைப் பங்கில் எல்லை அதிகரிப்பு அவதானிக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

வங்கியின் மனித வள திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட 2015 யூன் 11 ஆந் திகதிய 2015/65 ஆம் இலக்க அலுவலகச் சுற்றறிக்கையின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 45 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட உள்ளபடியான பதவியணியினர் 34 ஆக மாத்திரம் காணப்பட்டதுடன் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்திற்கு போதுமான பதவியணியினரை வங்கி ஒதுக்கியிருக்கவில்லை. மேலும், நிதித் திணைக்களம், மனித வள திணைக்களம் ஏனையவையின் செயற்பாடுகள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தினால் எவ்வித கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான மற்றும் செலவினங்களுக்கிடையில் 1 சதவீதம் தொடக்கம் 36 சதவீதம் வரையான வீச்சில் முக்கியமான முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் பாதீடானது வங்கியின் வினைத்திறனான உள்ளகக் கட்டுபாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வங்கியின் முறைமைகள் மற்றும் கட்டுபாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்குக் காலம் வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| கணக்கீடு | - நட்டக்கழிவு ஏற்பாடுகளின் கணிப்பீடு<br>- வருடத்தின் இறுதியில் காலக்கழிவுக் கிரயத்தில் உத்தியோகத்தர் கடன்களின் இனம்காணல |
| கடன் நிர்வாகம் | - அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகளுடனான இறுக்கமான இணக்கப்பாடு.<br>- கடன்களின் பதிவழிப்பு |
| மனித வள முகாமைத்துவம் | - பிரமாணங்களுடனான இணக்கப்பாடு |
| உள்ளகக் கட்டுப்பாடு | - வங்கியின் அனைத்து செயற்பாடுகளில் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளினை விரிவாக்கல்.<br>- வங்கியின் முறைமையிலுள்ள கட்டுப்பாடுகளினைப் பலப்படுத்தல்.<br>உ+ம் வட்டி வீதங்களில் மாற்றங்கள், வைப்புக்களுக்கு எதிராக கடன்களினை கடனுடன் வைப்பினை இணைப்புச் செய்தல் |